# பண்டைத்தமிழில் ஒலிச்சொற்கள்

(working draft with only a few examples; v.s.rajam)
===================================================

## ஏன்? (Why?)
===========

தமிழ் மொழியில் அமைதியைக் ("silence; quietness") குறிக்கும் சொற்கள் மிகச்சிலவே: "அமைதி" தவிர வேறென்ன தனிச்சொல்லைக் காண்கிறோம்? ஆனால், ஒலியை/ஓசையை/இசையைக் ("sound/noise/music") குறிக்கும் தனிச்சொற்கள் மிகப்பல! ஏன்?

******

தமிழர் பண்பாடு ஒலி/ஓசை/இசை நிறைந்தது.

ஒலியற்ற/ஓசையற்ற/இசையற்ற நிலையை உயிரற்ற/சுவையற்ற நிலையாக, ஓரளவு திகிலூட்டும் நிலையாகக்கூடக் கருதும் அளவிற்குத் தமிழர் வாழ்வில் ஒலியும் ஓசையும் இசையும் இடம் பெறுகின்றன.

மனித உணர்வுகளின் பல்வேறு நிலைகளை/படிமங்களை ஒலியின்/ஓசையின்/இசையின் வழி வெளிப்படுத்துவது தமிழர்க்கு எளிது, இயல்பு.

குழந்தையை உறங்கச்செய்யத் தாய் பாடும் தாலாட்டு முதல் இறந்தவர்களுக்குச் செய்யும் ஈமச்சடங்கு ஈறாகத் தமிழர் வாழ்வில் இன்றியமையாத ஒவ்வொரு செயலும் ஒலி/ஓசை/இசை நிறைந்தது.

******

உயர்திணை/அஃறிணையாயினும் உயிரற்ற உடல் தவிர மற்ற எல்லா உயிரும்/பொருளும் தாமாகவோ பிறவற்றின் தாக்குதலுக்கு எதிராகவோ ஒலியை/ஓசையை/இசையை வெளிப்படுத்துகின்றன.

தன்னியக்கமற்ற கல்லைத் தட்டினாலும், மரத்தைப் பிளந்தாலும், மணலில் நடந்தாலும், நீரை அலைத்தாலும் ஒலி பிறக்கும்!

ஒரு பொருள் எழுப்பும் ஒலி அதன் நலனைச் சுட்டிக்காட்டுகிறது. இன்றுகூட முழுத்தேங்காயைத் தட்டிப்பார்த்துத்தானே வாங்குகிறோம்!

கதிரவன் எழுச்சியைக் காண இயலாதபோதும் காட்டுக்கூகையின்

குரலாலும் மனைக்கோழியின் கூவலாலும் பொழுது கண்டறிய முடியும்.

ஓவியம், சிற்பம், நடனம் போன்ற கலைகளை நுகர அவ்வக் கலைக்கும் காண்போருக்கும் இடையே தொலைவு, காட்சிமறைவு போன்ற தடைகள் இருக்கக்கூடாது. ஆனால், ஒலியை நுகர்வோருக்கும் ஒலிக்கும் இடையே காட்சித்தடை இருந்தாலும் அது நுகர்வுத்தடையாக அமையாது; தொலைவுகூடப் பெருந்தடையாக அமைவதில்லை; தொலைவுக்கேற்ற ஒலியைப் பயன்படுத்தமுடியும்; எனவே கருத்து வெளிப்பாட்டிற்கும் கருத்து நுகர்வுக்கும் இடையே தடையில்லை.

ஓவியமும் சிற்பமும் காலந்தோறும் ஒரே உணர்வை வெளிப்படுத்துகின்றன. ஆனால் ஒலியும் ஓசையும் இசையுமோ பலவகை உணர்வுகளைக் காலத்திற்கேற்றபடி ஒரே நேரத்தில் உடனே தருகின்றன.

இவைபோன்ற உண்மைகளை உணர்ந்த பண்டைத் தமிழ்ப்புலவர்கள் இவற்றின் நுண்மையைத் தம் பாடல் சிறக்கக் கையாண்டதில் என்ன வியப்பு?!

## எப்படி? (How?)
=============

### இடைக்காலப் பேரிலக்கியமொன்றில்...
-----------------------------

"கையில் எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்" (கம்பராமாயணம், பாலகாண்டம், 13.கார்முகப்படலம், 34:3-4) என்ற செய்தியில் "இற்றது கேட்டார்" என்ற தொடர் இன்றேல் வில்லை முறித்துச் சீதையை மணந்த இராமன் கதை தொடராது! "கண்டனர்" என்ற சொல்லில் "அன்" சாரியை சேர்த்த கம்பர் "கேட்டார்" என்ற கூற்றில் அந்த "அன்"னை விலக்கிச் சொற்சுருக்கத்தால் மட்டுமே வில்லின் நாண் அறுபட்ட வேகத்தைக் கட்புலனால் அன்றிச் செவிப்புலனால்தான் உணர முடிந்தது என்ற நுண்மையை அருமையாக விளக்கிவிட்டார்!

### சங்க இலக்கியத்தில்...
--------------------

உவமைகளாகவும், வாழ்வின் வழக்காறுகளாகவும், ஆற்றுவழி காட்டும் விளக்கங்களாகவும், நாட்டின் நன்னிலையைப் பறைசாற்றும் ஊடகங்களாகவும்

சங்க இலக்கியத்தில் ஒலிச்சூழல்கள் அமைகின்றன.

ஒலிச்சூழல்களை அமைக்க ஒலிக்குறிப்புச் சொற்களையும் குறிப்பிட்ட ஒலியுணர்த்தும் தனிச்சொற்களையும் சங்கப்புலவர்கள் கையாளுகின்றனர்.

******

"ஒலிக்குறிப்புச் சொற்களை" மிகப்பரவலாகப் பயன்படுத்துதல்:
(இவ்வகைப்பட்ட சொற்கள் அனைத்துமே ஒலியைக் குறிக்காவிட்டாலும் அவற்றைச் சொல்லும்போது புறப்படும் ஒலி தனிப்பட்டதுதான்!)

இலக்கண நோக்கில் பார்த்தால், இவ்வகைச் சொற்கள் வினையடையாகவோ பெயரடையாகவோ பயில்கின்றன.

நற் 47:4-5
உழுவையைக் களிறு அட்டது. பிடி தன் குழவியைத் தழுவி "ஒய்யென" வருந்தியது. இது தலைவனது கானக நாட்டில்.

புற 176: 5-7
"இழுமென" ஒலிக்கும் புனல் அம் புதவிற்
பெருமா இலங்கைத் தலவன் ... நல்லியக்கோடன்

(இன்றும் இந்த வழக்கம்--"ஒலிக்குறிப்புச்சொற்களைப்" பயன்படுத்தும் வழக்கம்--தமிழரிடமிருந்து மறையவில்லை! எடுத்துக்காட்டாக: "சட்னு வா," "வெள்ளென வா," "உம்முனு இருக்கான்," "பட்டென அறைந்தான்," ... . )

******

இசையை உவமை கூறல்:
குறு 365
தலைவியின் கண்களில் நீர் வற்றாத நிலையை விளக்கத் தலவனுடைய மலை நாட்டு அருவியின் இமிழிசை உவமை கூறல்.

******

விலங்குகளை விரட்ட ஓசையைப் பயன்படுத்தும் வழக்காறு:
புற 291
வீழ்ந்துபட்ட கரந்தை வீரனின் புண்ணை நரியணுகவிடாமலிருக்க விளரிக் கொட்பு உதவுதல்.

******

இன்பமும் துன்பமும் ஒலிவழி வெளிப்படல்:
புற 194
ஓர் இல்லத்தில் நெய்தல் கறங்குகிறது (துயர் வெளிப்பாடு); ஓர் இல்லத்தில் முழவின் பாணி ததும்புகிறது (மகிழ்ச்சி வெளிப்பாடு).

******

ஆற்றுவழியில் இசையுணர்தல்:
சிறுபாண்: 34-37
பாலைவழி நடந்த களைப்பயர நைவளம் பழுனிய பாலைப் பண் இயக்குதல்.

சிறுபாண்: 77
தும்பியின் இசையில் "காமர" இசையைக் கேட்டறிதல்.

சிறுபாண்: 151
பாடல் சான்ற நெய்தல் நெடுவழி.

******

மலைப்பாங்கில் இசை:
குறிஞ்சிப்பாட்டு: 146-148
வண்டின் இமிர்வுக்கு நைவளம் பழுனிய பாலை உவமை.

திருமுருகாற்றுப்படை: 239
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடுகிறார்கள்.

******

ஆறலை கள்வரின் மனம் மாற்றும் பாலை:
பொருநராற்றுப்படை: 21-22

ஆறலை கள்வர் படைவிட அருளின் மாறு தலைப்பெயர்க்கும் பாலை.

******

தீக்கடையும் கோலில் பாலை இசை பிறப்பித்தல்:
பெரும்பாண்: 178-180

******

மரல் நாரில் குறிஞ்சி இசை பிறப்பித்தல்:
பெரும்பாண்: 182

******

தலைவியின் ஊருக்கு அடையாளம்:
அக 94
இடையன் குளிர்காயப் பயன்படுத்தும் கொள்ளி குறுநரியை உளம்பும் விளி புனங்காவலரின் கொம்பூதும் ஓசையோடு ஒருங்கு இசைக்கும் காட்டுநாட்டது தலைவியின் ஊர்.

******

தலைவி தன் காதல் மகிழ்ச்சியை மறைமுகமாக வெளிப்படுத்தல்:
குறு 23
தலவனின் மலைநாட்டைப் பாடும்படி அகவன் மகளை வேண்டுதல்.

******

தலைவியின் காதல் உணர்வைக் கூவி வெளிப்படுத்த இயலாத் துயர நிலை:
குறு 28

******

பன்னில மக்களின் மகிழ்ச்சி நிறைந்த கலந்துறைவு:
பொருநராற்றுப்படை: 218-221
பரதவர் குறிஞ்சி பாட, கானவர் மருதம் பாட, அகவர் முல்லை நிலத்தில் பஃறிணை நுவலுகிறார்கள்.